बन्धनं - கட்டுதல்

कन्धरः - முகில்

कन्धरा - கழுத்து

बान्धवः - உறவு, நண்பன்

सैन्धवं - கடலுப்பு

सैन्धवः - குதிரை, ஸிந்து தேசக் குதிரை

गन्धर्वः - தேவகாயகன், ஆண் குயில், வானஸஞ்சாரி, தேவயோனி, குதிரை, யாதனசரீரம்

गन्धकुटी - முறமென்னும் வாஸனைச் செடி

गन्धफली - ஞாழல், சம்பக மொட்டு

गन्धरसः - போளம், கந்தரஸம்

गन्धवहः, गन्धवाहः - வாயுபகவான், காற்று

गन्धवहा - மூக்கு

अन्धकारं, अन्धकारः - இருள்

अन्धकारिः - சிவன்

गन्धसारः - சந்தனம்

गन्धमूली - சிறுகச்சோலம், சிறு இண்டஞ்செடி

बन्धस्तंभः - யானை கட்டுதறி

स्कन्धशाखा - மரத்தின் முதற்கிளை

आन्धसिकः - சமையல்காரன்

अन्धतमसं - கும்பிருட்டு

बान्धकिनेयः - விபசாரி மகன்

गन्धमादनः - ஓர் மலை, ஓர் வானர வீரன், வண்டு, கந்தகம்

गन्धमादना - கள்ளு

बन्धनालयः - சிறைக்கூடம்

गन्धनाकुली - ஸர்பாக்ஷி என்னும் ஔஷதி

गन्धर्वहस्तकः - ஆமணக்கு

सुगन्धः - நறுமணம்

कवन्धं - ஜலம், தலையில்லா முண்டம்

कवन्धः - வயிறு, ராகு, ஓர் அரக்கன், ராமாயண பாத்ரம்

विबन्धः - மலபந்த நோய், நீர்க் கட்டு

प्रबन्धः - காவியம்

दुर्गन्धः - துர்நாற்றம்

निर्बन्धः - தொந்தரவு

संबन्धः - சேர்க்கை, கலப்பு

आबन्धः - நுகத்தடியை மாட்டுவது—கழுத்தில் வைத்துக் கட்டுவது

सुगन्धकः - கந்தகம்

अरुन्धती - வஸிஷ்ட பத்னி

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

निवन्धनं - பிரடை, வாத்யங்களில் தந்தி கட்டுமிடம்
स्तनन्धयः - சிசு
स्तनन्धयी - பெண்சிசு
युगन्धरः - ஏர்க்கால்
धुरन्धरः - கார்ய நிர்வாஹி, பொறுப்பேற்றுக்கொள்பவன்
वसुन्धरा - பூமி
नाडिन्धमः - தட்டான்
पाणिन्धमः - கைகொட்டுபவன், கரதாள வித்வான்
प्रवन्धकल्पना - நூலியற்றுதல், கதை எழுதுதல்
अनुवन्धः - குற்றம் விளையுமிடம், பெரியோரைத் தொடரும் சிசு, அழிவில்லாதது, திரும்பாதது
प्रतिवन्धः - தடை
अमृतान्धः - स தேவன்
जनुषान्धः - பிறவிக்குருடன்
इष्टगन्धः - உயர்ந்த வாஸனை
मुष्टिवन्धः - கை மடக்குதல்
कालस्कन्धः - தும்பை, பச்சிலை மரம், வேங்கை மரம்
मृगबन्धनी - விலங்குகளைப் பிடிக்கும் வலை
गजबन्धनी - யானை கட்டுதறி
पादवन्धनं - பசு, எருமை முதலியவற்றின் கால்கட்டும் வரி கயிறு
प्रसवबन्धनं - அரும்பு
कुमुदबान्धवः - சந்த்ரன்

सन्धा - எல்லை, ஆணை, இரண்டு எலும்புகள் சேருமுறுப்பு
सन्धानं - கள்ளிறக்குதல்
गन्धाश्म - न கந்தகம்
मान्धाता - ऋ ஸூர்ய வம்சத்தில் உதித்த — ராகவனுடைய மூதாதையரிலொருவர்
गान्धारः - ஓர் தேசம், ஏழு ஸ்வரங்களில் 'க' என்னும் ஸ்வரம், ஸிந்துரம், ஓர் ராகம்
गान्धारी - த்ருதராஷ்ட்ரனுடைய மனைவி, துர்யோதனன், முதலானவர்களின் தாய்
सुगन्धा - } ஸர்பாக்ஷி என்னும்
नागसुगन्धा - } செடி
किष्किन्धा - வாநரராஜதானி
विदारिगन्धा - மேல்மல்லி என்னும் செடி
सन्धिः - ராஜதந்த்ரங்களில் ஒன்று, சேர்க்கை, சத்ருவோடு ஸமாதானஞ்செய்து கொள்ளல்
गन्धिकः - கந்தகம்
गन्धिनी - ஞாழல், சம்பகமொட்டு
सौगन्धिकं - பத்மராகமெனும் ரத்னம், இளம்புல், காவட்டம் புல்
सौगन्धिकः - கந்தகம்
दृढसन्धिः - கெட்டியான எலும்பு-கீல்பூட்டுக்களுள்ளவன்
पूतिगन्धिः - துர்கந்தம்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, J

पर्वसन्धिः - ப்ரதமைக்கும்—பஞ்ச தசிக்கும் (அமாவாஸ்யை—பௌர்ணமிகள்) இடையிலுள்ள காலம்

आमगन्धि - கருவாடு, அபக்வ மாம்ஸம் முதலியவற்றின் துர்கந்தம்

अजगन्धि - ஞாயர்வேளை எனும் செடி

भसगन्धिनी - அரேணுகம் எனும் தக்கோலம்

मल्लिगन्धी - மல்லிகைப்பூ வாஸனையுள்ள அகில்

अन्धुः - கிணறு

वन्धुः - உறவு, துணை, தாய்

सिन्धुः - கடல், வைதரணி என்ற எமலோகநதி, வாந்தி, ஸிந்துநதி, ஸிந்து தேசம், யானையின் மதம்

सिन्धुजः - உப்பு, குதிரை

वन्धुता - உறவினர் கூட்டம்

वन्धुरं - உயர்ந்தும் வளைந்துமிருப்பது, மகுடம், எண்ணைக் கசண்டு, அழகானது

वन्धुरः - செவிடன், அன்னப் பறவை, உச்சித்திலகம்

वन्धुरा - விலைமாது, பூமி, மாது

वन्धुलः - அவிசாரி பிள்ளை

वन्धुजीवकः - } उच्चித்திலகம் என்
वन्धुकः - } னும் செடி

कर्कन्धुः } - இலந்தைமரம்
कर्कन्धूः }

अर्कवन्धुः - புத்தர்

ब्रह्मबन्धुः - பார்ப்பானை நிந்திப்பவன்—குறிப்பவன்

बन्धूकपुष्पः - வேங்கைமரம்

गन्धोली - வெட்டுவலியன் என்னும் பறவை, சுக்கு

गन्धोत्तमा - கள்

न्न

अन्नं - சாதம், சோறு, உண்ணப்பட்டது

खिन्नः - மனம் நொந்தவன்

छन्नं - மறைந்தது, மூடப்பட்டது, ரஹஸ்யம்

छिन्नं - வெட்டப்பட்டது

तुन्नः - படுகரணை

नुन्नः - வெட்டப்பட்ட(து)வன்

पन्नं - வீழ்ந்தது, நழுவினது

भिन्नं - பிளந்தது, பிளக்கப்பட்டது, வேறு

भिन्नः - வேறானவன்

विन्नं - ஆராயப்பட்டது, கிடைத்தது, உணரப்பட்டது

हन्नं - வெளிப்பட்ட மலம்

स्कन्नं - पन्नं

स्यन्नं - பெருகினது, ஒழுகினது

पन्नगः - ஓர் அரவு, மருந்துச்செடி

उन्नतं - உயர்ந்தது

उन्नयः - } உயரத்தூக்குதல், ஊகித்தல்
उन्नायः - }

किन्नरः - தேவயோனி

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

उन्नसः - அதிகமாய்ப் பருத்த மூக்குள்ளவன்
सन्नयः - பின்பலம், கூட்டம்
उन्नद्धः
समुन्नद्धः - உயரமாயிருப்பவன்
सन्नद्धः - ஸஜ்ஜமாயிருப்பவன்
छिन्नरुहा
छिन्ना - சிந்திற்கொடி
तुन्नवायः - தையற்காரன்
किन्नरेशः - குபேரன்
उन्नतानतं - உயர்ந்தும் வணங்கியுமிருப்பது
पन्नगाशनः - கருடன்
वितुन्नं - ஆரை, பாசி
समुन्नं - நனைந்தது
प्रपन्नः - சரணடைந்தவன்
प्रभिन्नः - மதம்பிடித்த யானை
प्रसन्नं - தெளிவானது
प्रसन्नः - உள்ளம் மகிழ்ந்தவன், ப்ரத்யக்ஷமானவன்
परान्नं - பிறமனைச்சோறு
परान्नः - பிற வீடுகளிலேயே உண்டு வாழ்பவன்
आपन्नः - ஆபத்தடைந்தவன், வந்து சேர்ந்தவன்
उत्पन्नं - பிறந்தது, முளைத்தது
संपन्नः - தனவான், கூடினவன், சேர்ந்தவன்
निष्पन्नं - நடந்தது, முடிந்தது
आसन्नः - நெருங்கினவன்
आसन्नं - ஸமீபம்

प्रहृन्नः - ஸந்தோஷமடைந்தவன், த்ருப்தியடைந்தவன்
वितुन्नकः - அருநெல்லி, கொத்தமல்லி, காசதுத்தம்
कुटन्नटं - பெருமுத்தக்காசு, பெருங்கோரைக்கிழங்கு
कुटन्नटः - பெருவகை
प्रसन्नता - நிர்மலமானது, தோஷமற்ற தன்மை
सर्वान्नभोजी - न எந்தச் சோறு எங்கு கிடைத்தாலும் உண்பவன்
प्रतिपन्नं - அறிந்தது
उपपन्नं
समुपपन्नं - நேர்ந்தது, நடந்தது
अभिपन्नः - தவறினவன், குற்றவாளி, பிடிக்கப்பட்டவன், ஓடுபவன், விபத்தில் சிக்கினவன்
परमान्नं - பாயாஸம், சர்க்கரை கலந்த அன்னம்
सर्वसन्नहनं - எல்லாப் படைகளையும் ஸன்னத்தமாக்குதல்
उपसंपन्नं - கொல்லப்பட்ட யாகபசு, தூறிக்கப்பட்டது, பக்குவமானது
संशयापन्नमानसः - ஸந்தேகப்ரக்ருதி
पुन्नागः - ஸுரபுன்னை, வெள்ளை நெய்தல், வெள்ளை யானை, உயர்குணமனிதன், ஜாதிக்காய், ஆண்யானை
अन्नादः - உண்பதே வேலையாயிருப்பவன்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, J

सान्नाय्यं - ஹவிஸ்ஸு
प्रसन्ना - கள், சந்தோஷமடைந்த வள், முகமலர்ச்சியுள்ளவள்
प्रपुन्नाड: - தகரை
अधिविन्ना - மூத்த தாரம்
सन्निधि: - ஸமீபம், பக்கம் எதிர்ப் புறம்
सन्निवेश: - அமைப்பு, காலிமனை, ஊரைச்சுற்றியுள்ள வெளிப் புறம்
सन्निकृष्टं - நெருங்கினது
सन्निकर्षणं ஸமீபம்
पितृसन्निभ: - தந்தையைப்போன்ற வர், தந்தைக்கு நிகரான பிள்ளை
सर्वान्नीन: - சோறுகண்ட இடம் ஸ்வர்கமாயிருப்பவன்

न्म

जन्म - न } பிறவி
जन्मं - }
मन्मथ: - மன்மதன், மனத்தில் எழும் காமப்பேய், விளா மரம்
उन्मद: - பூதம் பிசாசு முதலிய க்ஷுத்ரங்களால் நேரும் பீடை
उन्मना: - स - இஷ்டஸித்தியில் ஏக்கங்கொண்டவன்
चिन्मय - சேதனவஸ்து, அந்த ராத்மா, ப்ரகாசிப்பது
उन्मदिष्णु: - ஸ்வய உணர்வற்ற வன், பித்துப்பிடித்தவன்

हरिन्मणि: - மரகதப்பச்சை என்ற ரத்னம்
पुत्रजन्म - பிள்ளைப்பேறு
मरुन्माला - நாகப்பூ
नीलांबुजन्म - न கறு நெய்தல், நீலோத்பலம்
काश्मीरजन्म - " குங்குமம்
उन्माथ: - கொலை, விலங்குகளைப் பிடிக்கவைத்த பொறி
उन्माद: - மூளைக்கலக்கம்
उन्मादवान् - त பைத்தியக்காரன், தன் நினைவற்றவன்
शरजन्मा - न சரவணபவன்
जन्मी - " ப்ராணி, மனிதன்
विनाशोन्मुखं - பழுத்தது, அழியக் கூடியது
जन्मोत्सव: - பிறந்தநாள் கொண் டாட்டம்

न्य

न्यक् - च குள்ளன்
न्यस्तं - வைக்கப்பட்டது, விடப் பட்டது, எறியப்பட்டது
न्याद: - சாப்பாடு, போஜனம்
न्याय: - நீதி, தர்க சாஸ்த்ரம்
न्याय्यं - உசிதமானது, சரியா னது, ந்யாயமானது
न्यायाधिपति: - நீதிபதி
न्यास: - வைத்தல், புதையல், மறைத்து வைத்தல்
न्युब्ज: - கூனன்; குனிந்தவன்
न्यूनं - (अ) உறுதியாக
न्यूनं - குறைந்தது, இழிவானது

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

अन्यत् - अ வேறொன்று
अन्य: - வேறொருவன், ஸாதாரண மனிதன்
जन्यं - } சண்டை, லோகாபவாதம்
जन्य: - }
धन्यं - } புண்யசாலி, நற்குணசாலி
धन्य: - }
वन्यं - காட்டிலுள்ளது, தோட்டத்திலுள்ளது
दैन्यं - வறுமை, துயர், கிர்கதியான நிலை
धान्यं - நவதான்யம், நெல், கொத்தமல்லி
मान्यं - } கௌரவிக்கத் தக்கது, வெகுமானிக்கத் தகுந்தவன்
मान्य: - }
वैन्य: - ஓர் அரசன்
शून्यं - ஒன்றுமில்லாதது, கிர்ஜனப்ரதேசம், புள்ளி
सैन्यं - } படை, படையைச் சேர்ந்தவன்
सैन्य: - }
स्तन्यं - முலைப்பால்
स्तैन्यं - திருட்டுத்தனம், திருட்டுத்தொழில்
कन्यका - கன்னிப் பருவத்தினள், குமாரி, மணமாகாதவள்
अन्यथा - (अ) இல்லையானால்
अन्यदा - ,, மற்றொரு ஸமயம்
अन्यतरं - இரண்டிலொன்று
अन्यतर: - இருவரிலொருவன்
धान्यत्वक् - च உமி
कन्यकाजात: - கன்னிப்பெண்ணுக்குப் பிறந்த பிள்ளை, கர்ணன், வியாஸர்

जघन्यं - கடைசியில் இருப்பது, ஆண் குறி
जघन्य: - கடைக்குட்டி, கீழ்க் குலம்
अजन्यं - உத்பாதம், பயங்கரம்
वदान्य: - உதார ஸ்வபாவமுள்ளவன், நல்லமனிதன், பேசுந்திறனுள்ளவன்
राजन्य: - க்ஷத்ரியன், அக்னி
सौजन्यं - நல்ல தன்மை, ஸாதுக்களின் ஸ்வபாவம்
पर्जन्य: - இடி முழக்கம், முழங்கும் முகில், இந்த்ரன்
प्राधान्यं - முக்யம்
सामान्यं - ஸாதாரணம், கீழ்த்தரம்
अन्योन्यं - ஒன்றுக்கொன்று, ஒருவருக்கொருவர்
जघन्यज: - கடைசி ஸஹோதரன், நான்காம் வர்ணத்தவன்
अनन्यज: - மன்மதன்
राजन्यकं - க்ஷத்ரியர்களின் கூட்டம்
अनन्यवृत्ति: - குறிப்பாய் ஒன்றிலேயே லயித்த மனத்தினன், வேறு த்யானமே இல்லாதவன்
तृणधान्यं - ஒருவரும் விதைக்காமல் தானே முளைத்தது
वहुधान्य: - ஓர் வர்ஷம்
तृणशून्यं - மல்லிகை
शमीधान्यं - உளுந்து, பயறு, கொள்ளு, காராமணி, கடலை, எள்ளு முதலிய தான்யம்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

d by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation,

शूकधान्यं - கோதுமை, கேழ் வரகு, சோளம் முதலி யவை, கூரிய முனையுள்ள தான்யம்

पौनःपुन्यं - திரும்பத் திரும்ப— அடிக்கடி செய்வது

मेखलकन्यका - நர்மதாநதி

अन्या - வேறொருத்தி, ஸம்பந்த மில்லாதவள்

कन्या - கன்னிப் பருவத்தினள், மணமாகாதவள், ஓர் ஓஷதி, புரட்டாசி மாஸம், கன்யாராசி

जन्या - தாய்

धन्या - புண்யவதி

मन्या - கழுத்துப் பிடரியிலுள்ள நரம்பு

वन्या - பல காடுகள்

मान्या - கௌரவிக்கத்தக்கவள்

अन्यायः - அக்ரமம்

विन्यासः - அலங்காரம், வேற்றுமை யிலுள்ள அழகு

सन्यासः - துறவு

धन्याकं - / धान्याकं - / धान्यकं - } தனியா என்னும் கொத்தமல்லி விரை

धान्याम्लं - கழுநீர், காடி

उदन्या - தாகம், நீர்வேட்கை

अपन्यायः - தகாத முடிவு, அன் யாயத் தீர்ப்பு

उपन्यासः - ப்ரவசனப், சொற் பொழிவு

महान्यासः - மறையவர் கூடிச் செய்யும் வேதமந்த்ர ஜபம்

बलिविन्यासः - படையணிவகுப்பு

जन्युः - ப்ராணி, அக்னி, ப்ரஹ்மா

मन्युः - குற்றம், வேண்டுகோள், கோபம், மனநோவு, துயரம், யாகம்

भुवन्युः - எஜமானன், ஸூர்யன்

शतमन्युः - இந்த்ரன்

उपमन्युः - ஓர் மகர்ஷி

अभिमन्युः - அர்ஜுனனுடைய பிள்ளை

न्व

धन्व - न வில், ப்ரதேசம்

अन्वयः - வம்சம், கோர்வை, சேர்க்கை, ஓர் அலங்காரம்

धन्वयासः - சிறுகாஞ்சோறி

मन्वन्तरं - ஒவ்வொரு மனுவின் காலம்

धन्वा - न மருப்ரதேசம்

अन्वाकः - வேதசாகை

उदन्वान् - त கடல்

राजन्वान् - ” உத்தமமான அரசனை யுடைய நாடு

शार्ङ्गधन्वा - न விஷ்ணு

पुष्पधन्वा - ” மன்மதன்

मेरुधन्वा - ” சிவன்

अन्वितः - கூடினவன்

शुभान्वितः - க்ஷேமத்தோடு கூடின (ள)வன்

समन्वितलयः - சாஸ்த்ரயுக்தமான பரதநாட்யம், ஒன்றுபட்ட தாளவாத்ய முத்தாய்ப்பு

प्रतिभान्वितः - பகுத்தறிவுள்ளவன் கல்பனஞானமுள்ளவன்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

विस्मयान्वितः - ஆச்சர்யம் அடைந்தவன்
धन्वी - न வில்பிடித்தவன்
अन्वेणा - தேடுதல்

प्त

सप्त - न ஏழு
उप्तं - விதை தெளித்த நிலம்
कुप्तः - சினங்கொண்டவன்
क्लृप्तं - நிர்ணயிக்கப்பட்டது, வழக்கமானது, அளவிலடங்கினது
गुप्तं - மறைந்திருப்பது, மறைக்கப்பட்டது, ரக்ஷிக்கப்பட்டது
तप्तं - தவிப்பது, தாபங்கொண்டது, சூடுகண்டது, திளைப்பது
तप्तः - கஷ்டப்பட்டவன், வாடினவன்
तृप्तः - ஸந்தோஷப்பட்டவன், போதுமென்று கருதினவன்
दृप्तः - கர்வங்கொண்டவன், மதங்கொண்டவன்
लिप्तं - பூசப்பட்டது, உண்ணப்பட்டது
लुप्तं - மறைந்துபோனது
सुप्तः - உறங்குபவன். தூங்கினவன்
आप्तः - வேண்டியவன், நன்மையே நினைப்பவன்—செய்பவன், நம்பிக்கைக்குரித்தானவன்

दीप्तं - ப்ரகாசிக்கச் செய்யப்பட்டது
व्याप्तं - நிறைந்தது
प्राप्तं - கிடைத்தது, உசிதமானது
प्राप्तः - வந்தவன், அடைந்தவன்
लिप्तकः - நஞ்சில் தோய்த்த அம்பு
सप्तकी - ஒட்யாணம்
सप्तला - காய்த்துராய், பாதிரி மரம், இருவாக்ஷி
सप्तर्षिः - அத்ரி முதலிய ஸப்த ரிஷிகள்
उप्तकृष्टं - விதைத்த பிறகு உழுதல், பரம்படித்தல்
सप्तपर्णः - ஏழிலைப்பாலை
सप्तसप्तिः - ஸூர்யன்
प्राप्तरूपः - அழகானவன், பண்டிதன்
साप्तपदीनं - தோழமைகொள்ளல், நன்றாய்க்கொதித்தது
प्रसुप्तः - அயர்ந்துறங்கினவன்
समाप्तं - முடிவுற்றது
अवाप्तं - கிடைத்தது
सन्तप्तः - மிகவும் மனம் மெய்கள் வேதனைப்பட்டவன்
पर्याप्तं - போதுமானது, நிறைந்திருப்பது
अवलिप्तः - அவமதிக்கப்பட்டவன்
नप्ता - ऋ போத்தி
सप्तार्चिः - स அக்னி
सप्ताश्वः - ஸூர்யன்
मनोगुप्ता - மனச்சிலை

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ed by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, J

गुप्तिः - காவல், மறைப்பு
तृप्तिः - ஸந்தோஷம், மனதிற்கு ஸமாதானம்
सप्तिः - குதிரை
दीप्तिः - ப்ரகாசம்
प्राप्तिः - கிடைக்கக்கூடியது, லாபம், அஷ்டஸித்திகளில் ஒன்று
समाप्तिः - முடிவு
रथगुप्तिः - ரதத்தில் இருப்பவன் ஜாக்ரதையாயிருக்கவென்றமைத்த தட்டு
आकारगुप्तिः - மனதில் உள்ளதை முகபாவம் முதலியவற்றால் வெளிக்காட்டாதிருத்தல்
अप्तुः - சரீரம்

प्न

स्वप्नक् - न ஸதா உறங்குபவன்
स्वप्नः - தூக்கம், ஸ்வப்னவஸ்தை, கனவு
अस्वप्नः - தேவன்
दुःस्वप्नः - கெட்ட கனவு

प्प

अप्पतिः - கடல், வருணன்
पिप्पलं - நீர்
पिप्पलः - அரசமரம்
पिप्पली - திப்பிலி
पिप्पलीमूलं - திப்பிலிக்கட்டை
गजपिप्पली - யானைத்திப்பிலி
तोयपिप्पली - நீர்த்திப்பிலி
अप्पित्तं - அக்னி

प्म

पाप्म - न பாவம்

प्य

प्याट् - (अ) விளிச்சொல்
कुप्यं - தாம்ரம், வெண்கலம் முதலிய லோஹம்
जप्यं - ஜபிக்கத்தக்கது, சொல்லத்தகுந்தது
आप्यः - ஜலத்தின் மாறுபாடு, நுரை
गोप्यं - ரக்ஷிக்கத்தக்கது, வெளியிடத்தகாதது
दीप्यः - ஓமச்செடி
याप्यः - கீழ்ப்பட்டவன், அல்பன்
रूप्यं - செல்வம், வெள்ளி
रूप्यः - அழகானவன்
व्याप्यः - கீழாநெல்லி
गोप्यकः - வேலைக்காரன், அடிமை
याप्यमानं - பல்லக்கு
आप्यायनं - தர்ப்பணம், த்ருப்திப்படுத்துவது

प्र

प्रगे - (अ) - விடியற்காலம்
प्रजा - ஜனம், குலம்
प्रति - (अ) பதில், எதிரே, ப்ரதிநிதியாக, குறித்து
प्रथा - புகழ், ப்ரஸித்தி
प्रदः - கொடுப்பவன்
प्रधिः - தேர் வண்டி முதலியவைகளின் சக்கரத்தின் விளிம்பு

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

प्रपा - தண்ணீர்ப்பந்தல்
प्रभा - ஒளி
प्रभु: - ஈச்வரன், தனவான், எஜமானன்
प्रमा - விவேகம், ஞானம், தெளிவு
प्रसू: - அன்னை, பெண்குதிரை, தேசம், வாழை
प्रहि: - கிணறு
प्रष्ठ: - பெரியவன், தலைமை தாங்குபவன்
प्रस्थं - / प्रस्थ: - } ஓர் அளவு, குன்றின் சிகரம்
प्रश्न: - கேள்வி, குறிகேட்டல்
प्रह्व: - வணங்கினவன்
प्रभृति - (अ) —திலிருந்து —து முதல்
प्रभृति: - முதலானவர்
प्रतिपत् - द ப்ரதமைதிதி, புத்தி
प्रलपन् - त புலம்புபவன், அழுபவன்
प्रहरन् - " அடிப்பவன்
प्रचलन् - " அசைவது, புறப்படுபவன்
प्रविशन् - " உட்புகுபவன்
प्रहसन् - " சிரிப்பவன்
प्रमुखं - / प्रमुख: - } முதலானது, முக்யமானவன்
प्रतिघा - கோபம்
प्रकटं - மிகவும் அதிகமானது
प्रगुण: - கோணலில்லாமல் இருப்பது
प्रघण: - / प्रघाण: - } வீட்டு வாசற்படிக்கு முன்புள்ள இடம்

प्रवण: - சிறிதுசிறிதாய் தாழ்ந்து செல்லும் நிலம், வணங்கினவன், நான்கு சாலைகள்—நாற்சந்துகூடுமிடம், 'தயா'ராயிருப்பவன், உதார ஸ்வபாவமுள்ளவன், வீழ்ந்தவன், ஸமமாயிருப்ப(து)வன்
प्रकृतं - ஆரம்பித்த கார்யம், தற்சமயம் உள்ளது, மேல் நடக்கவேண்டியது
प्रगतं - வீணானது, ஒடிந்தது
प्रणत: - தலை வணங்கினவன், நமஸ்கரித்தவன்
प्रणुतं - துதிக்கப்பட்டது
प्रथित: - புகழ்பெற்றவன்
प्रभुता - ப்ரபுத்தன்மை
प्रयत: - முயன்றவன், பரிசுத்தன்
प्रसित: - ஆவலுள்ளவன்
प्रसृतं - வளர்ந்தது
प्रसृता - முழங்கால்
प्रहत: - அடிக்கப்பட்டவன்
प्रकृति: - ஸ்வபாவம், மந்த்ரி முதலிய ராஜபரிவாரம், பொதுஜனம், மாயை, ஆண் பெண் குறிகள்
प्रणति: - வணக்கம், நமஸ்காரம்
प्रमिति: - உயர்ந்த ஞானம்
प्रसिति: - கட்டுவதற்கனுஸாரணையான சாரம் முதலியவை
प्रसृति: - ஒரு சிராங்காய் என்ற அளவு
प्रमथ: - சிவகணம்
प्रपदं - முன்னங்கால்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

tized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

प्रमदः - ஆனந்தம், மதங்கொண்ட(து)வன்
प्रमदा - ஸ்த்ரீ
प्रणिधिः - யாசித்தல், தலையாரி
प्रजनं - மாட்டைச் சினைக்கு விடுவது
प्रतनं - பழமையானது
प्रधनं - யுத்தம், பிளத்தல்
प्रमनाः - स மகிழ்ச்சியுற்றவன்
प्रसभं - பலாத்காரம்
प्रतिभूः - 'ஜாமீன்' கொடுப்பவன்
प्रथमं - } முக்யமானவன், முதலாவது
प्रथमः - }
प्रतिमा - பதுமை, விக்ரஹம்
प्रथमा - ப்ரதமைதிதி
प्रणयः - ஸ்னேகம், காதல், நம்பிக்கை, பிச்சை
प्रलयः - யுகமுடிவு, பயங்கரமானது, மிதமிஞ்சினது, மரணம், ஆபத்து, மூர்ச்சை
प्रवयाः - स வயோதிகன், கிழவன்
प्रचुरं - அதிகமானது
प्रदरः - நோய், அலை, ஸ்த்ரீ-ரோகம், பாணம்
प्रवरः - குலம், ச்ரேஷ்டன்
प्रसरः - பரவுதல், வேகம், வேண்டுகோள்
प्रहरः - ஜாமம் என்ற காலப்பகுதி
प्रतलः - சாண், உள்ளங்கை
प्रबलं - கடுமையானது, சக்தி வாய்ந்தது
प्रबलः - பலசாலி
प्रणवः - ஓங்காரம்

प्रभवः - உத்பத்தி, பிறப்பு, ஓர் வர்ஷம், பராக்ரமம்
प्रसवः - பிள்ளைப்பேறு, புஷ்பம், பழம்.
प्रजवी - न அதிக விரைவுள்ள(து)வன்
प्रथवी - பூமி
प्रवहः - வீட்டைவிட்டு வெளிப்புறப்படுவது, ஓர் வாயு
प्रतिश्रुत् - எதிரொலி
प्रविष्टः - உட்புகுந்தவன்
प्रयस्तं - } தாளித்த—'மஸாலா' கலந்த—கறி, கூட்டு முதலிய வ்யஞ்ஜனம்
प्रशस्तं - }
प्रशस्तं - உயர்ந்தது, ச்லாக்யமானது
प्रशस्तः - பெருமை பொருந்தியவன்
प्रहस्तः - சாணளவு, ராவணனுடைய ஓர் முக்ய மந்த்ரி
प्रबुद्धः - தெளிந்த அறிவுள்ளவன்
प्रवृद्धं - வளர்ந்தது
प्रवृद्धः - கிழவன்
प्रगल्भः - கெட்டிக்காரன், புத்திசாலி
प्रसव्यं - அனுகூலம், ப்ரதிகூலம் இரண்டிற்கும் பெயர்
प्रसह्य - (अ) கஷ்டப்பட்டு
प्रफुल्लं - நன்ருய் மலர்ந்தது
प्रफुल्लः - குலுங்கப்பூத்த மரம்
प्रबर्हं - } உத்தமமானது
प्रबर्हं - }

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Ja

प्रतीकः - உடலின் உறுப்பு, எதிரிடை

प्रवेकः - முக்யமானது, ச்ரேஷ்டன்

प्रयागः - கங்கை, யமுனை, ஸரஸ்வதி என்ற மூன்று நதிகளும் ஒன்று கலந்த ஓர் புண்யக்ஷேத்ரம்

प्रयोगः - விடுதல், எறிதல்

प्रतीची - மேற்குத்திசை

प्रगाढं - கெட்டியானது, கஷ்டமானது

प्रमाणं - சாஸ்த்ரம், மர்யாதை, எல்லை, வழக்கம், உண்மையுரை, அளவு, காரணம்

प्रयाणं - யாத்ரை

प्रवीणः - ஸமர்த்தன்

प्रवेणी - பின்னல்

प्रणीतः - மந்த்ரத்தால் பூஜிக்கப்பட்ட அக்னி, சமைத்த கறி முதலியவை, செய்யப்பட்டது, வைக்கப்பட்டது, தள்ளிவிடப்பட்டது

प्रतीतः - ப்ரஸித்தன், காணப்பட்டது, ஆதரவுள்ளவன்

प्रपातः - தாழ்வரை, வீழ்ச்சி, நீர் வீழ்ச்சி

प्रभातः - விடியற்காலம்

प्रयातः - சென்றவன்

प्रभूतं - நிறைந்திருப்பது, எழுந்த(வன்)து

प्रमीतः - வெளிச்சென்றவன், செத்தவன்

प्रवातः - பேய்க்காற்று

प्रसूतं - மலர்

प्रजाता - } ப்ரஸவித்தவள், மக
प्रसूता - } வீன்றவள்

प्रदाता - ஈ கொடையாளி, கொடுப்பவன்

प्रचेताः - வருணன், ஓர் முனிவர், நல்ல சித்தமுள்ளவன்

प्रसूतिः - ப்ரஸவம்

प्रणादः - பெருஞ்சத்தம், காதுநோய், ஸீத்காரம்

प्रतोदः - சாட்டை, சவுக்கு

प्रमादः - அஜாக்ரதை, அலக்ஷ்யம், திமிர்கொண்டவன்

प्रमोदः - ஸந்தோஷம்

प्रसादः - அனுக்ரஹம், தெளிவு, அனுஸரித்தல், ப்ரியம்

प्रमादी } - ஓர் வர்ஷம்
प्रमाथी }

प्रबोधः - ஐயந்திரிபற்ற உணர்வு, விழித்திருத்தல்

प्रडीनं - பறவைகளின் கதி விசேஷம்

प्रदानं - நன்கொடை

प्रधानं - முக்யம், அறிவு, ஈச்வரன், ஸ்வபாவம், உத்தமம்

प्रसूनं - மலர், பழம்

प्रकोपः - ரௌத்ராகாரம்

प्रतापः - க்யாதி, வலிமை, வெப்பம்

प्रदीपः - தீபம், விளக்கு

प्रलापः - புலம்பல்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

itized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

प्रलोभः - ஏமாற்றுதல், வஞ்சித்தல்

प्रकामं - (अ) மிகவும்

प्रणामः - வணங்குதல்

प्रयामः - தான்யம் முதலியவற்றைச் சேகரித்தல், நிஜமான ஸாக்ஷி சொல்வது

प्रणेयः - வசப்பட்டவன்

प्रकारः - விதம், மாதிரி, பேதம்

प्रचारः - ஸஞ்சாரம்

प्रतीरं - கரை

प्रसारः - பரவுதல்

प्रहारः - அடித்தல்

प्रवालं - பவழம், குருத்து, வீணையின் தண்டு

प्रमीला - சோம்பல், ஓச்சல்

प्रणाली - வடிமடை, வடிகால்

प्रतोली - வீதி, தெரு

प्रभावः - பெருமை, அரசனுடைய சக்தி

प्रसेवः - பறி, வடிக்கட்டும் ஸாதனம், மாச்சல்லடை முதலியன

प्रकाशः - ஒளி, வெய்யில், மிகவும் கீர்த்தியுள்ளவன், வெளிப்படையானது

प्रदेशः - இடம், நிலம், குறித்த ஸ்தலம், வெளியூர்

प्रवेशः - புகுதல், ஆரம்பம்

प्रदोषः - ஸூர்யாஸ்தமன காலம், ப்ரதோஷ புண்ய காலம், கடுமையான தோஷமுள்ள (து)வன்

प्रभासः - ஓர் புண்யதடாகம்

प्रयासः - ச்ரமம், முயற்சி

प्रवासः - வெளியூர் வாஸம்

प्रमेहः - தோல் ஸம்பந்தமான வியாதி

प्रवाहः - பெருக்கு, நீரோட்டம்

प्रश्रितः - வணக்கமுள்ளவன்

प्रश्रयः - வணக்கம், வேண்டுகோள்

प्रस्तरः - கல், பாறை, ரத்னம்

प्रस्थानं - புறப்படுதல், யாத்ரை, வேதப்பிரிவு

प्रस्तावः -) ஒன்றைச் சொல்லத்
प्रस्तावना -) தொடங்குவது, ஸந்தர்பம்

प्रस्तावः - ஒழுக்கு, மூத்திரம்

प्रष्ठवाट् - பழக்குவதற்கு நுகத்தில் எருதோடு எருதாய்க் கட்டப்பட்ட காளைமாடு

प्रष्ठौही - கன்றுப் பருவத்திலேயே சினைப்பட்டமாடு, முதல் ஈத்து மாடு

प्रतिपणं - 'ஜாமீன்'

प्रकरणं - தகுந்த சமயம், ஸந்தர்பம்

प्रतरणं - ஏமாற்றுதல்

प्रसरणं - நிறைந்திருக்கும் படைப் பெருக்கு

प्रहरणं - அடி, ஆயுதம்

प्रवहणं - பல்லக்கு, 'டோலி'

प्रमुदितः - பரமானந்தம் அடைந்தவன்

प्रलपितं - பிதற்றல்

प्रशमितं - அடங்கினது

प्रचलितं - அசைந்தது, நகர்ந்தது, பெயர்ந்தது

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

प्रहसितं - நகைத்தல், பரிஹஸித்தல்

प्रतिहतं - தடுக்கப்பட்டது, ஏமாற்றமடைந்தது

प्रणिहितं - வைக்கப்பட்டது

प्रवहितं - பெருக்கெடுத்தது

प्रतिकृतिः - மருந்து, மாற்று, பதுமை

प्रतिनिधिः - பதிலாள், முக்யமானவன், அதிபதி, பொம்மை

प्रतिपदं - (अ) ஒவ்வொரு சொல்லுக்கும், ஒவ்வொரு சொல்லிலும்

प्रवचनं - உபந்யாஸம், சொற்பொழிவு

प्रमथनं - கொலை

प्रतिदिनं - (अ) நாள்தோறும்

प्रहसनं - ஓர் நாடகம்

प्रतिभयं - பயானகரஸம், அச்சம்

प्रतिसरः - தடை, ஒன்றைச் செய்யக்கருதி அணியும் கங்கணக் கயிறு, படையணி வகுப்பின் பின்புறம்

प्रतिविषा - அதிவிடயம்

प्रतिकृष्टः - கீழ்த்தரமான மனிதன்

प्रणिपातः - நமஸ்காரம்

प्रतिदानं - கொடுத்ததைத் திருப்பிக் கொடுத்தல், அடகுப் பொருளைத் திருப்பிக் கொடுத்தல்

प्रतिमानं - பதுமை, யானையின் இரண்டு தந்தங்களுக்கும் இடையிலுள்ள அவயவம்

प्रतिकूलं - எதிரிடையானது, விபரீதமானது

प्रतिकूलः - பகைவன், பகைப்பவன்

प्रतिहासः - அலரிச்செடி

प्रतिरोधी - न சத்ரு, திருடன்

प्रतिसीरा - திரைச்சீலை

प्रतिबिंबं - தன் உருவம், நிழல், விக்ரஹம்

प्रतिकर्म - அலங்காராதிகளால் செய்துகொள்ளுமழகு

प्रवल्हिका - } ஆழ்ந்த கருத்துள்ள
प्रहेलिका - } கேள்வி—நூல்

प्रतिश्रवः - ஸபை, ஆதாரம், அனுகுதல்

प्रतिश्रवः - ஒத்துக்கொள்ளுதல், அங்கீகாரம்

प्रकीर्णकं - சாமரம்

प्रकीर्णकः - குதிரை, விஸ்தாரம்

प्रसेवकः - வீணையின் காய், மாச்சல்லடை, தோல்பை

प्रसूतिका - ப்ரஸவித்தவள்

प्रवाहिका - க்ரஹணி என்ற ஸ்த்ரீ ரோகம்

प्रसूतिजं - கஷ்டம், துக்கம்

प्रमापणं - கொலை

प्रवारणं - தடுத்தல், ஒரு பயனைக் கருதித் தானம் செய்தல்

प्रसारिणी - முதியாகூந்தல்

प्रचोदितं - தூண்டப்பட்டது, ஏவப்பட்ட(வன்)து

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

tized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

प्रसाधितं - அலங்கரிக்கப்பட்ட (வன்)து

प्रजापतिः - ப்ரஹ்மா, அரசன், ஸூர்யன், அக்னி, தக்ஷன், கர்தமன் முதலிய ப்ரஜா பதிகள், மாப்பிள்ளை

प्रजावती - ஸஹோதரனுடைய மனைவி

प्रयोजनं - பயன்

प्रबोधनं - உணர்த்துதல், எழுப்பு தல், வாஸனையூட்டுதல்

प्रसाधनं - அலங்காரம், அழகு செய்தல்

प्रदीपनं - தீப்பற்றவைத்தல்

प्रदीपनः - ஓர் கொடிய நஞ்சு

प्रदेशनं - நண்பர்களுக்கும், தேவதைகளுக்கும் அளிப் பது

प्रवासनं - கொலை

प्रचोदनी - சிறுவழுதல் செடி

प्रसाधनी - சீப்பு, ஸித்தி, பாத்தை மனை

प्रतानिनी - கொடி, படர்கொடி

प्रदेशनी / **प्रदेशिनी** - ஆள்காட்டி விரல்

प्रभाकरः - ஆதித்யன்

प्रतापसः - வெள்ளெருக்கு

प्रतीकारः - பகை தீர்த்துக்கொள் ளல்

प्रतीहारः - வாயில், அரண்மனை வாசல், வாசற்படி, வாயிற் காப்போன்

प्रतीहारी - வாயிற்காப்பவன்

प्रतीकाशं - சோபிப்பது

प्रतीकाशः - நிகர்த்தவன்

प्रतिष्टंभः - தடை

प्रतिश्यायः - பீனஸமென்ற மூக்கு வியாதி

प्रविश्लेषः - பிரிவு, இணைபிரிதல்

प्रयोगार्थः - ஸைன்யம் யுத்தத்திற் குப் புறப்படுதல்

प्रस्रवणं - ஊற்று

प्रभ्रष्टकं - கூந்தலிலணிந்த மலர்

प्रस्फोटनं - முறம்

प्रस्थपुष्पः - மரு, மருச்செடி, கிடாரை

प्रष्ठवाहः - பழக்குவதற்கு நுகத் திற்கட்டின எருது

प्रमदवनं - அரண்மனை, அந்தஃ புரத்தில் அரசனும் ராஜ ஸ்த்ரீகளுமாய்க் கூடியாட அமைந்த பூங்கா

प्रविदारणं - சண்டை

प्रचलायितः - உட்கார்ந்தபடி தூங் குகிறவன்

प्रतियातना - பதுமை, விக்ரஹம்

प्रतिपादनं - நிரூபித்தல், விளக்கி யுரைத்தல், அறிவு, கொடை

प्रतिशासनं - தூது விடுதல்

प्रमथाधिपः - பரமசிவன்

प्रतिजागरः - எச்சரிக்கை, ஜாக் ரதை

प्रपितामहः - தந்தையின் பாட்ட ஞர், கொள்ளுப் பாட்டன்

प्रगतजानुकः - முழங்கால் விழுந்த வன்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

प्रतीपदर्शिनी - ஸ்த்ரீ
प्रसूजनयितारौ - ऋ தாயுந்தந்தையும்
प्राक् - च கிழக்கு, அறிவாளி
प्राक् - (अ) முன்பு
प्राङ् - च முன்நாள் மனிதன்
प्राची - கிழக்குத்திக்கு
प्राण: - உயிர், காற்று, வாயு, பஞ்சப்ராணன்களில் ஒன்று, போளம், வலிமை, நிறைந்தவன்
प्राणी - न ஜந்து
प्रात: - (अ) காலைநேரம்
प्रादु: - " வெளிப்படுதல்
प्राय: - / प्रायश: - (अ) அனேகமாய், பெரும்பாலும்
प्राय: - பட்டினி, சாவு, நிறைவு, உவமை
प्रावृट् - ष மழைகாலம், வர்ஷருது, (ஆவணி—புரட்டாசி)
प्रास: - வல்லயம்—ஈட்டி என்னும் ஆயுதங்கள், ப்ராஸமென்னுமலங்காரம், கவிசித்ரம்
प्राह्ण: - காலைசந்தி
प्रांशु: - உயர்ந்தது
प्रासिक: - ஈட்டி பிடித்தவன்
प्राचिका - காட்டுத்தேனீ, ஓர் பறவை
प्राकृत: - அல்பன், ஸாமான்யன்
प्राभृतं - நண்பனுக்கு—தெய்வத்திற்குக் கொடுக்கும் உபாயனம்
प्रावृतं - சூழ்ந்தது, துப்பட்டி
प्राजिता - ऋ தேர்ப்பாகன்
प्राजनं - சாட்டை, தார்க்குச்சி

प्रार्थितं - வேண்டுகோள்
प्रासाद: - அரசர்களின் மாளிகை, தேவாலயம்
प्राचीनं - / प्राचीरं - பழமையானது, ஊரைச் சுற்றிப் போட்ட வேலி
प्राचीना - சேவுகனூர்பூண்டு
प्रालेयं - பனி
प्राकार: - கோட்டை, மதில்
प्राधार: - நழுவுதல்
प्रावार: - அங்கவஸ்த்ரம், மேல் வேஷ்டி, உத்தரீயம்
प्रादेश: - ஒட்டைச்சாண் என்ற அளவு
प्रारब्धं - மூவினையில் ஒன்று, ஆரம்பிக்கப்பட்டது
प्रालंबं - கழுத்திலிருந்துமார்பில் தொங்கும் மலர்மாலை
प्रापणिक: - வியாபாரி
प्रालम्बिका - காசுமாலை, தங்கச் சங்கிலி, 'செயின்'
प्रादेशनं - தானம், த்யாகம்
प्रातिहारिक: - செப்பிடுவித்தைக்காரன், பீதாம்பர வித்தை செய்பவன்
प्रातिकषिक: - விடன், தூர்த்தன்
प्रावृषायणी - பூனைக்காலிச் செடி
प्राचीनावीतं - பூணூலை விபரீதமாயணிதல்
प्राथमकल्पिक: - வேதாப்யாஸஞ் செய்ய ஆரம்பித்தவன்
प्रियं - ஆசை, அன்பு, காதல்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

tized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

प्रियः - காதலன், நாயகன், மனோஹரன், வ்ருத்தியென்னும் ஓஷதி

प्रिया - காதலி, மனைவி

प्रियकः - கடம்புவ்ருக்ஷம், வேங்கை மரம், ஞாழல், ஒருவகை மான்

प्रियता - ஸ்னேஹம், தோழமை

प्रियंवदः - / प्रियवादी - न } இன்பமாய்ப் பேசுபவன்

प्रीतः - த்ருப்தி அடைந்தவன், மனங்குளிர்ந்தவன்

प्रीतिः - நட்பு, இஷ்டம்

प्रीणनं - மகிழ்வித்தல், த்ருப்திப் படுத்துதல்

प्रुष्टं - எரிக்கப்பட்டது

प्रेतः - இறந்தவன், பிசாச—பூத வர்கம், நரகத்திலுள்ள ஜீவன்

प्रेम - / प्रेमा - } न ஸ்னேஹம், ப்ரியம்

प्रेयान् - स மனதிலன்புள்ளவன்

प्रेयसी - காதலி, மனைவி

प्रेष्ठः - மிக்க அன்புடையவன்

प्रेषः - / प्रैषः - } அனுப்புதல், அடித்தல், வருடுதல், துக்கம், மூளைக்கோளாறு

प्रेषणं - ஏவுதல்

प्रैष्यः - வேலைக்காரன், அடிமை

प्रोथः - குதிரையின் மூக்கு, இடுப்பு, வழிப்போக்கன்

प्रोष्ठपदा / प्रौष्ठपदा } - பூரட்டாதி நக்ஷத்ரம்

प्रौष्ठपदः - புரட்டாசி மாதம்

प्रौष्ठी - கெண்டைமீன்

प्रौढः - ஸமர்த்தன்

प्रौढं - பருத்தது, வளர்ந்தது

तृप्रं - நெய், விறகு, துயரம்

तृप्रः - அக்னியில் செய்யும் ஆஹுதி, ஹவிஸ்ஸு

दृप्रः - பலசாலி

वप्रः - கோட்டை, தந்தை, கரை, வயல்

विप्रः - ப்ராம்ஹணன்

सृप्रः - சந்த்ரன்

सम्प्रति - (अ) இப்பொழுது

निष्प्रभं - ஒளி மழுங்கினது, களையழிந்தது

साम्प्रतं - (अ) ந்யாயமே, ரொம்பப் பொருத்தம், இப்பொழுது

अप्रगुणः - வக்ரமான(து)வன், ஒழுங்கற்ற(து)வன்

विप्रकृतः - வெறுத்துத் தள்ளப்பட்ட(து)வன்

अप्रहतं - தரிசுபோட்ட நிலம், உழாத வயல்

सुप्रतीकः - குபேர (வடக்குத்) திசையின் ஆண் யானை, அழகியதோற்றமுள்ளவன்

विप्रयोगः - காதலர்களின் பிரிவு

निष्प्रवाणी - புத்தாடை, புது 'ஜவுளி'

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jal

विप्रलब्ध: - வஞ்சிக்கப்பட்டவன்
अप्रधानं - முக்யமல்லாதது, அவ்வளவு உபயோகமில்லாதது
विप्रलाप: - அவச்சொல், விரோதமாகவே பேசுவது, முன்னுக்குப்பின் விரோதமாய் பேசுவது
सुप्रलाप: - மங்களகரமான சுப வார்த்தை
विप्रलंभ: - கோணல்கக்ஷி, ஏமாற்றம்
संप्रदाय: - பரம்பரையாய் வரும் நல்ல பழக்கம்
विप्रकार: - இடைஞ்சல் செய்தல், ஹிம்ஸித்தல்
संप्रहार: - போர்
विप्रश्निका - குறி சொல்பவள், ஞானத்ருஷ்டியுள்ளவள்
आप्रपदं - / आप्रपदीनं - } கால்கள் முழுதும் மறையத்—தழைய உடுத்த ஆடை
विप्रकृष्टकं - எட்ட இருப்பது
संप्रधारणं - இது சரியென்று நிர்ணயித்தல்
दुष्प्रधर्षणी - / दुष्प्रधर्षिणी - } கத்திரி—கத்தாரிச் செடி
विप्रतीसार: - பச்சாத்தாபம், கழிவிரக்கம்
सुप्रयोगविशिख: - அஸ்த்ரசஸ்த்ர வித்தையில்கை தேர்ந்தவன்
सकृत्प्रज: - காக்கை
वहुप्रद: - பெருங்கொடையாளி
असांप्रतं - தகாதது, அழகல்லாதது

वातप्रमी: - காற்றெதிரே செல்லும் ஓர் மான்
पितृप्रसू: - தந்தையின் தாய், பாட்டி, ஸந்த்யாகாலம்
अय:प्रतिमा - லோஹத்தால்—தங்கம், வெள்ளி முதலியவற்றால் வார்த்த விக்ரஹம், பதுமை
चिरप्रसूता - வல்லீத்துப் பசு
वानप्रस्थ: - இல்லறத்திலிருந்து விரக்தியடைந்தவன், இலுப்பை மரம்
विसप्रसूनं - தாமரை
अर्थप्रयोग: - வட்டி
वारिप्रवाह: - வெள்ளப் பெருக்கு
चर्मप्रभेदिका - / चर्मप्रभेदिनी - } தோலறுக்கும்உளி
चर्मप्रसेविका - துருத்தி
तृतीयप्रकृति: - / तृतीयाप्रकृति: - } நபும்ஸகன், அலி, பேடி
अप्राग्र्यं - முக்யமல்லாதது
नडप्राय: - நெட்டைக்கோரை மண்டின பூமி
अभिप्राय: - கருத்து
जलप्रायं - நீர்த்தாழ்ந்த—நீர்த்தேக்கமுள்ள பூமி, சதுப்பு நிலம்
शतप्रास: - அலரிச்செடி
वनप्रिय: - குயில்
हलिप्रिय: - கடம்பமரம்
हरिप्रिया - லக்ஷ்மி
हलिप्रिया - கள்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

tized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

विप्रुट् - ष நீர்த்திவலை
पशुप्रेरणं - பசுமாடுகளை ஒட்டுதல்
कटिप्रोथः - இடுப்பின் பின்பாகம், பின்தட்டு

प्लु

प्लवः - தெப்பம், குரங்கு, தாவுதல், ஓசை, வான்கோழி, தவளை, மிலேச்சன், மேட்டுப்பாங்கான நிலம், அண்டங்காக்கை, நீர்க்காக்கை, இரளிமரம், பெருமுத்தக்காசு என்ற செடி, ஓர் வர்ஷம்
प्लवगः - குரங்கு, தவளை
प्लीहा - न குன்மம் என்ற வயிற்று நோய்
प्लुतं - தாண்டுதல், அச்வகதி, மூன்று மாத்திரை ஸ்வரம்
प्लुष्टः - எரிக்கப்பட்ட(வன்)து
प्लोषः - எரிச்சல், வறட்சி
विप्लवः — கொள்ளை — வழிப்பறி முதலிய தேசபீடை
आप्लवः - } ஸ்னானம்
आप्लाव - }
आप्लवव्रती - न வேதாத்யயனஞ் செய்த நைஷ்டிக ப்ரஹ்மசாரி
उपप्लवः - உபத்ரவம், ராகு
परिप्लवं - } அசைவு, கலக்கம்
पारिप्लवं - }
सोपप्लवः - உபத்ரவத்தோடு கூடினவன், உத்பாதங்களைக் கொண்ட நாடு

अनुपप्लवः - ஒருவித ஹிம்ஸையுமில்லாதவன், ஒரு கஷ்டமுமில்லாத தேசம், காலம்
पिप्लुः - கழலைநோய், கழலைநோய் உள்ளவன், கறுத்துத்தடிக்கும் சர்மநோய்

प्स

प्सातं - உண்ணப்பட்டது
अप्सराः - स தேவகணிகை
लिप्सा - ஆசை, ஆவல்
जुगुप्सा - கூச்சம், வெட்கம், வெறுப்பு
यथेप्सितं - இஷ்டம்போல
अभीप्सितं - விருப்பம், மிகவும் ப்ரியமானது

ब्ज

अब्जं - தாமரை, சங்கு
अब्जः - சந்த்ரன், தன்வந்தரி, நீர்க்கடம்பு
कुब्जः - கூனன்
कुब्जा - கூனி (மந்தரை)
अब्जयोनिः - ப்ரஹ்மா

ब्द

अब्दः - வர்ஷம், மேகம், முஸ்தாச் செடி
शब्दः - ஓசை, சொல், ந்யாய சாஸ்த்ரத்தில் 'ஆப்தர்களின் வாக்கு' என்னும் ப்ரமாணம், புகழ், இசை, எழுத்து, வானம், காதின் விஷயம்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

शाब्दं - சப்தஞானம்
शब्दन: - இரைபவன், கூச்சலிடு பவன்
सुशब्द: - நல்ல வாக்கு, பிழை யற்ற சொல்
निश्शब्द: - ஓசையற்ற நிலை, சாந் தமான இடம்
अपशब्द: - அவச்சொல், காதைப் புண்செய்யும் வார்த்தை
एकाब्दा - ஒரு வயதுப் பசுவின் கிடாரி
अब्दपूर्ति: - ஆண்டு நிறைவு
आब्दिकं - ஆண்டுதோறும் நடப் பது

ब्ध

दृब्धं - சேர்க்கப்பட்டது, குவிக் கப்பட்டது
लब्धं - கிடைத்தது
लुब्ध: - கஞ்சன், லோபி, பேராசை பிடித்தவன், வேடன்
स्तब्ध: - அசைவற்ற(வன்)து
लुब्धक: - வேடன்
लब्धवर्ण: - பண்டிதன்
स्तब्धरोमा - பன்றி
आरब्धं - தொடங்கப்பட்டது
अवष्टब्ध: - நெருங்கினவன், அண் டினவன், கட்டப்பட்ட(து) வன்
उपलब्धार्था - உண்மையாய் நடந்த சரித்ரம், தெரிந்த கதை
अब्धि: - கடல், ஏரி, குளம், கிணறு
अब्धिक: - கடல் நுரை
उपलब्धि: - கிடைப்பது, லாபம், புத்தி

ब्र

ब्रसी - ஜபம் முதலியன செய்யப் போட்ட தர்பாஸனம்
ब्रह्म - न பரப்ரஹ்மம், பரமாத்மா, வேதம், ஞானம், தவம், ஆத்மஞானம்
ब्रह्मसू: - மன்மதன், அனிருத்தன்
ब्रह्मर्षि: - வஸிஷ்டர், நாரதர், அத்ரி முதலியவர்
ब्रह्मभूयं - பரப்ரஹ்மமாய்ச் சமை தல், ஸித்தியடைதல்
ब्रह्मचारी - न உபநயனமானவன், முதல் ஆச்ரமத்தவன், ப்ர ஹ்மசர்யவ்ரதம் தவறாத வன், அத்யயனஞ் செய்ப வன்
ब्रह्मदारु - பூவரசமரம்
ब्रह्मदर्भा - ஆடுதீண்டாப்பாளை
ब्रह्मवर्चसं - ப்ரஹ்ம தேஜஸ்ஸு, வேதாத்யயனம் செய்த ஒளி, ப்ராஹ்மண தர்ம நிய மங்கள் வழுவாதவனு டைய தேஜஸ்ஸு
ब्रह्मा - न பிரமன், பிராமணன்
ब्रह्मासनं - த்யானம் யோகம் முத லானதைச் செய்ய அமை த்த பீடம், ஸ்வஸ்திகம் முதலிய ஆஸனம்
ब्राह्मं - ப்ரஹ்மாவிற்குச் செய்யும் தீர்த்த தர்பணம்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

tized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

ब्राह्मः - தேவயுகம் இரண்டாயிரங் கொண்ட ப்ரஹ்மாவின் ஒரு நாள்

ब्राह्मणं - வேதியர் கூட்டம், வேத சாகை

ब्राह्मणः - பார்ப்பனன், ப்ரஹ்ம ஞானமுள்ளவன்

ब्राह्मणी, ब्राह्मणयष्टिका - சிறுதேக்கு

ब्राह्मी - ஸரஸ்வதி, ஸப்தமாதாக்களில் முன்னவள், வாக்கு, ப்ரஹ்மசக்தி, சிறுதேக்கு

कुब्रं - காடு

चुब्रं - முகம்

सब्रह्मचारी - ஒரே குருவிடம் ஒரே காலத்தில் வேதாத்யயனஞ் செய்யுஞ்சிஷ்யன்(கள்)

अब्राह्मणः - ப்ராஹ்மணேதரன்

भ्य

इभ्यः - பணக்காரன்

लभ्यं - கிடைக்கக்கூடியது, நியாயமாய்க் கிடைக்கவேண்டியது

सभ्यः - ஸபையிலுள்ளவன், உயர் குடிப் பிறந்தோன்

अभ्यर्णं - ஸமீபம், அருகில்

अभ्यमितः - நோயாளி

अभ्यर्हितः - பூஜிக்கப்பட்டவன், கௌரவிக்கப்பட்டவன்

अभ्यवहृतं - உண்ணப்பட்டது

अभ्यवकर्षणं - இழுத்தல், பறித்தல்

अलभ्यं - கிடைக்கக்கூடாதது

असभ्यः - அறிஞர் குழுவில் இருக்கத் தகாதவன்

सगर्भ्यः - ஸஹோதரன்

आर्षभ्यः - அவியாக்காளை

अभ्याशः - ஸமீபம்

अभ्यासः - பயிற்சி, பழக்கம்

अभ्यागमः - சண்டை, எதிர்ப்படல், அருகணைதல்

अभ्यामर्दः - சண்டை

अभ्यादानं - ஆரம்பம்

अभ्यागारिकः - குடும்பத்தை நிர்வஹிப்பவன்

अभ्यासादनं - செயலறச் செய்தல்

शराभ्यासः - ஆயுதப்பயிற்சி

अभ्युदितः - எழுந்தவன், ஸூர்யோதயத்திலுறங்குபவன்

अभ्युपगमः - அறிவு, அருகில் செல்லல், அங்கீகரித்தல், ஸ்வீகரித்தல்

अभ्यूषः - பணியாரம்

भ्र

भ्रमः, भ्रमिः - தோற்றம், மயக்கம், மனப்ராந்தி, பைத்யம், சூழ்ச்சி, நீர்ச்சுழல், தண்ணீர் பாய்மடை

भ्रष्टं - தள்ளப்பட்டது, விழ்ந்தது

भ्रंशः - நழுவி விழ்தல், உரிமையிழத்தல்

भ्रकुटिः, भ्रुकुटिः, भ्रूकुटिः - புருவம் நெரித்தல்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

भ्रमरः - வண்டு, காமுகன்
भ्रकुंसः - } பெண் வேஷந்தரித்த ஆண்
भ्रुकुंसः -
भ्रूकुंसः -
भ्रमरकः - நெற்றியில் புரளும் சுருட்டைமயிர், வண்டு
भ्राजः - स சோபை, அழகு
भ्राता - ऋ ஸோதரன்
भ्रान्तिः - பைத்தியம், பொய்யறிவு, சுற்றுதல்
भ्राष्ट्रः - வறையோடு
भ्रातृजः - ஸஹோதரனுடைய பிள்ளை
भ्राजिष्णुः - வஸ்த்ராபரணாதிகளால் சோபிப்பவன்
भ्रातृव्यः - சத்ரு, ஸஹோதரனுடைய பிள்ளை
भ्रातृजाया - ஸஹோதரனுடைய மனைவி
भ्रूः - புருவம்
भ्रूणे - கர்பம், கரு, சிசு
भ्रेषः - வீழ்தல்
विभ्रन् - त வைத்துக்கொண்டிருப்பவன், சுமப்பவன்
अभ्रं - முகில், வானம், தங்கம்
दभ्रं - அல்பம், சிறிது
शुभ्रं - ப்ரகாசிப்பது, வெளுப்பானது
श्वभ्रं - த்வாரம், துளை, குகை
अभ्रकं - 'அப்ரேக்'
विभ्रमः - ஸௌந்தர்யம், பதட்டம், பாவையரின் ச்ருங்கார பாவம்
अभ्रमुः - கீழ்த்திசைப் பெண் யானை
संभ्रमः - பரபரப்பு, வேகம்
शुभ्रदन्ती - வாயுதிக்குப் பெண் யானை
अभ्रपुष्पं - நக்ஷத்ரம், மழை, வஞ்சி
अभ्रमुवल्लभः - இந்த்ரனுடைய யானை, ஐராவதம்
अदभ्रं - பூர்ணம், நிறைவு
उरभ्रः - செம்மறியாடு
सिताभ्रः - கல்பூரம்
अवभ्रटः - சப்பைமூக்கன்
परिभ्रमः - அதிர்ச்சி, மயக்கம்
अपभ्रंशः - இலக்கண வழு, வீழ்ச்சி, அபத்தம்
औरभ्रकं - செம்மறியாட்டு மந்தை
विभ्राट् - न ஆடையாபரணாதிகளால் சோபிப்பவன்
शुभ्रांशुः - ஸூர்யன், சந்த்ரன்
यमुनाभ्राता - ऋ எமன்
अभ्रिः - உப்பு முதலானதைத் தோண்டும் மரக்குத்தலி
अभ्रियं - மேகத்தில் உண்டாகும் பொருள்
बभ्रु - பெரிது, மஞ்சள்நிறமானது
बभ्रुः - சிவன், விஷ்ணு, அக்னி, பிரமன், நரி, ஓர் முனி
अभ्रेषः - தனக்குரிய—தர்மம்—கடமைகளிலிருந்து வழுவாதிருத்தல்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

tized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

म्न

निम्नं - பள்ளம்

निम्नगा - நதி

सुरनिम्नगा - கங்கை

आम्नायः - வேதம், பெரியோர் களின் அபிப்ராயம்

म्प

सम्पत् - द ஐசுவர்யம்

कम्पः - நடுக்கம்

चम्पकः - செண்பகம்

जम्पती - } புருஷனும் மனைவியும்,
दम्पती - } பர்த்தாவும் பார்யையும்

कम्पनं }
कम्पनः } - அசைவு, ஆட்டம்
कम्प्रं }

किम्पचानः - } கஞ்சன், க்ருபணன்,
मिम्पचः - } லோபி, அல்பன்

संपरायः - } யுத்தம், ஆபத்து,
सांपरायः - } எதிர்காலம்

संपरायकं }
सांपरायिकः } - சண்டை

अकम्पनः - ராவணனுடைய மந்த்ரிகளிலொருவன்

पचम्पचा - மரமஞ்சள்

परम्परा - தொன்றுதொட்டு, வரிசை

अपांपतिः - வருணன், கடல்

दिशांपतिः - திக்பாலகர், இந்திரன் முதலானவர்

परम्पराकं - யாகபசுவதம்

पारम्पर्योपदेशः - வழிவழியாய்-தலைமுறையாய் கிடைத்த-வந்த உபதேசம்

यादसाम्पतिः - கடல்

पम्पा - கிஷ்கிந்தையருகில் உள்ள ஓர் தடாகம்

शम्पा - மின்னல்

शम्पाकः }
सम्पाकः } - கொன்றை
शम्याकः }

संपातिः - ஜடாயுவின் மூத்தவனான கழுகுவேந்தன், ஹனுமான் முதலியவர்களுக்கு லங்கையையும் ஸீதை இருக்குமிடத்தையும் சுட்டிக் காட்டினவன்

श्यैनंपाता - வேட்டை

तैलंपाता - அக்னியில் ஆஹுதியளிக்கும் (ஸ்வதா) மந்த்ரம்

अनुकंपा - தயை, இரக்கம்

अभिसंपातः - போர், சமர்

धारासंपातः - இடைவிடாத மழை, அடை மழை

कांपिल्यः - செறுகம்புல்

आकंपितं - அசைக்கப்பட்டது

संपुटकं - ஸம்புடம் (டப்பி)

किंपुरुषः - குபேரபுரியில் உள்ள கின்னரஜாதி, கிம்புருஷமென்ற ஓர் தேசப்பகுதி

चम्पूः - கத்ய பத்யம் கலந்த (செய்யுளும்வசனநடையும் கலந்த நூல்)

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jai

अहंपूर्विका - நான் முந்தி—நான் முந்தி என்னும் ஓட்டம் (போட்டி)

चांपेय: - சம்பகமரம், நாக கேஸரம் என்ற மரம், தாமரைத்தண்டு, தங்கம்

म्फ

संफुल्लं - கொள்ளை முதலிய உபத்ரவம், கும்பம் என்னும் வயிற்றுநோய்

म्ब

निम्ब: - வேப்பமரம்

बिम्बं - உருவம், வடிவம், ஸூர்ய-சந்த்ரமண்டலம், பொம்மை

शंब: - வஜ்ராயுதம், உலக்கைப் பூண், க்ஷேமமுள்ளவன்

जंब्वं - நாவல்பழம் (நாகப்பழம்)

स्तंब: - புல், பூண்டு, தண்டில்லாமல் இலையே நிறைந்த மரம், வைக்கோல்

सांब: - பரமசிவன்

चुंबनं - முத்தமிடுதல்

लंबनं - அட்டிகையென்ற ஆபரணம்

अंबरं - ஆகாசம், ஆடை

शंबरं - ஜலம்

शंबर: — மன்மதனுல் கொல்லப்பட்ட ஓர் அஸுரன், ஓர் மான் (சவுரிமான்) ஓர் மீன், சவுரிமலை

कंबलं - தண்ணீர்

कंबल: - கம்பளி, கம்பளிப் புழு—பூச்சி, மேலாடை

शंबलं - கட்டுசாத மூட்டை, வயிற்றுப் பிழைப்பிற்குத் தரும் பொருள்

शंबरी - எலிஆலென்னுஞ்செடி

अंबष्ठ: - ஓர் தேசம், ப்ராஹ்மண வைச்யா புத்ரன்

अंबष्ठा - பங்கெப்பாளை, புளிய ரத்தை, முல்லை

शांबरी - மாயை, பித்தலாட்டம்

कांबलं - கம்பளியால்மூடப்பட்ட தேர்

जांबवं - நாவல்(நாகப்)பழம்

जांबवान् - ராமாயண பாத்ரம்

स्तंबघ्न: -
स्तंबघन: - } புல்லறுக்கும் கருக்கரிவாள்

स्तंबकरि: - தான்யம்

निंबतरु: - பாரிஜாதம் என்னும் பவளமல்லிகை

शंबरारि: - மன்மதன்

अंबरीषं - வறையோடு

अंबरीष: - அம்பரீஷ சக்ரவர்த்தி, குழந்தை, ஸூர்யன், ஓர் நகரம்

कांबविक: - சங்கு ஊதுபவன்

कंबलिवाह्यक: - வண்டி

कटंब: - ஓர் வாத்யம்

कुटुंबं - ஸம்ஸாரம்

कडंब: - முனை, நுனி, கடம்ப மரம், கடம்பு என்ற மரம், பதர்

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

tized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

नितंबः - மாதரிடுப்பின் பின்புறம், மலையடிவாரம்

कलंबः
कलंबी } - ஓர் கீரை, வைக்கோல்

कदंबं - கூட்டம், தாளிக்கப் பட்டது

कदंबः - கடம்பமரம்

करंबः - சேர்ந்தது, கலந்தது

विलंबः - காலதாமதம்

कादंबः - காரன்னம், அம்பு

भूनिंबः - நிலவேம்பு

हेरंबः - விக்னேச்வரர், ஆணவம் மிக்கவன், எருமைமாடு

आलंबः - ஆச்ரயம், ஆதாரம்

त्यडंबकः - ஆமணக்கு

कदम्बकं - கூட்டம்

दिगंबरः - சிவன், அவதூதன், சமணன், வறியோன், இருள்

उदुंबरं - ஒருவகைக் குட்டநோய், தாம்ரமென்னும் லோஹம்

उदुंबरः - அத்திமரம், வாசற்படி

नवांबरं - புத்தாடை, கோடித்துணி

कोलंबकः - தந்தி இல்லாத வீணை யின் தண்டு

आडंबरः - வெளிப்பகட்டு, படா டோபம், வேஷம்

कादंबरी - கள், பெண் குயில், ஸரஸ்வதி, கிளி, ஓர் நூல்

औदुंबरं - தாம்ரம்

पीतांबरः - மஹாவிஷ்ணு

नीलांबरः - பலராமன்

निकुरुंबं - கூட்டம்

अवलंबः - ஆதாரம், ஊன்றுகோல்

निरालंबः - ஆதாரமில்லாதது

गलकंबलः - வ்ருஷபம் முதலிய வற்றின் கழுத்தில் தொங் கும் சதை

मेषकंबलः - ஆட்டு ரோமத்தால் செய்த கம்பளி

काकोदुंबरिका - பேயத்திமரம்

कुंबा - யக்ஞ—யாகசாலையைச் சுற்றி அமைத்த வேலி

अंबा - பார்வதி, தாய்

शिंबा - } தான்யங்களில் குத்தி
सिंबा - } எடுத்த பொட்டு

संबाधः - கூட்டம், நெருக்கம், புழுக்கம், யோனி

जंबालः - சேறு

शंबाकृतं - இரண்டு சால் உழுத நிலம்

गोतुंबा -
गोडुंबा - } பேய்க்கும்மட்டி

सजंबालः - சேற்றுமயமான நிலம்

कंबिः - அகப்பை, தர்வி

अंबिका - உமை

बिंबिका - கோவை

आलंबि - உரி

विलंबितं - காலதாமதமானது, தொங்கினது, மெல்ல ஆடும் ந்ருத்யம்

कुटुंबिनी - புருஷன் குழந்தைக ளுடன் வாழும் ஸ்த்ரீ

CC-0. In Public Domain Sri Aurobindo Library, Pondicherry

ized by eGangotri/Sarayu Trust. Funding IKS-MoE-Grant-2 Equipment Heritage Foundation, Jalg

नितंविनी - ஸ்த்ரீஜாதி
कादंविनी - மேகபங்க்தி
अवलंवितं - நெருங்கினது, அதிக தூரமில்லாதது
अविलंबितं - சீக்ரம், வேகமுள்ளது
शूकशिंबा - } பூனைக்காலி என்ற
शूकशिंवी - } செடி
तुंवी - சுரைச்செடி
जंवीरः - எலுமிச்சை, கிடாரை
कटुतुंवी - பேய்ச்சுரை
अंबु - ஜலம்
कंबु - சங்கு, வளை, கிளிஞ்சல்
जंबु - இலந்தை, இலந்தைப்பழம்
कंवुः - யானை, வளை, கிளிஞ்சல், சங்கு
जंबुकः - குள்ளநரி, வருணன், வஞ்சகன்
अंबुजं - தாமரை
अंबुदः } - மேகம்
अंबुभृत् }
अंबुधिः - ஸமுத்ரம்
संबुद्धिः - ஒருமைவிளி, வடமொழியில் ஸம்போதன ப்ரதமைகவசனம்
अंबुकणः - நீர்த்திவலை, நீர்த்துளி
अंबुसरणं - அருவி, நீரோட்டம்
अंबुवेतसः - நீர்வஞ்சி, பாசி
कुस्तुंबुरु - கொத்தமல்லி, 'தனியா'
केशांबुनाम - न குருவேர் என்ற மருந்துச்செடி
काष्ठांबुवाहिनी - தோணி

भूमिजंबुका - நிலநாவல்
कंबूः - பிறர் பொருளைக் கவர்பவன்
जंबूः - நாவல்மரம், நாவல் பழம், ஜம்பு என்ற (நாம் வாழும்) தீவு
शंबूका - கிளிஞ்சல், சிப்பி
तांबूलं - கமுகு
तांबूली } வெற்றிலைக்கொடி
तांबूलवल्ली }
स्तंवेरमः - யானை
कांवोजः - காம்போஜதேசக் குதிரை
कांबोजी - பெரியிடுகொள்ளு
लंवोदरः - விநாயகர்
संवोधनं - விளி, அறிவுறுத்தல்

म्भ

अम्भः - स ஜலம்
कुंभं - குங்கிலியம்
कुंभः - குடம், கும்பராசி, கும்பகர்ணனுடைய பிள்ளை, யானையின் மஸ்தகம், வேசி புருஷன்
